# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1682/45 - 2010 දෙසැම්බර් 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.12.02

*1682/45 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாண மாகாண சபை

*ஊவா மாகாண, மாகாண சபையின் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின் ஆளுநர் அவர்களுடைய நிதியம் பற்றிய நியதிச் சட்டத்தை திருத்துவதற்கான 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின் ஆளுநர் நிதியம் பற்றிய திருத்த நியதிச் சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண மாகாண சபையால் 2010, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2010, ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட முதலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிச் சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.*

*கே. டீ. சிறிசேன,*
*மாகாண சபைச் செயலாளர்,*
*ஊவா மாகாண மாகாண சபை.*

***ஊவா மாகாண மாகாண சபையின் 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க "ஊவா மாகாண ஆளுநரின் நிதியம்" பற்றிய நியதிச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு 2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க "ஊவா மாகாண ஆளுநரின் நிதியம்" பற்றிய நியதிச் சட்ம்***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுகின்றது :

*சுருக்கப் பெயர்.*

*1. இந்த நியதிச் சட்டமானது, 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஊவா மாகாண ஆளுநரின் நிதியம் (திருத்த) நியதிச் சட்டம் என எடுத்துரைக்கப்படுகிறது.*

*முதன்மை நியதிச் சட்டத்தின் 03 (2) ஆ பிரிவை திருத்துதல்.*

*2. 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஊவா மாகாண ஆளுநரின் நிதியம் பற்றிய நியதிச் சட்டத்தின் 03 (2)ஆ பிரிவு "ஊவா மாகாணத்தின் முதலமைச்சர் என்னும் பகுதிக்குப் பதிலாக "ஊவா மாகாணத்தின் முதலமைச்சர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் அவருடைய பிரதிநிதி ஒருவர் "என்னும் பகுதியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.*

*முதன்மை நியதிச் சட்டத்தின் 12 என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.*

*3. முதன்மை நியதிச் சட்டவாக்கத்தின் 12 என்னும் கீழ்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது.*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*"இந்நியதிச் சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்."*

*12- 549*